மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27–ம் நாள் செவ்வாய்கிழமை
அ.வ.எண். 142/21
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------

| | |
|---|---|
| பெயர்:சரோஜா | தேதி : 27.01.26 |
| வயது : | க/பெ : செல்லத்துரை |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

-----------------------------------------------------------

<u>27.01.26 குறுக்கு விசாரணை</u>

1. என் கணவரும், 1 ம் வாதியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் கணவருடன் பிறந்த சகோதரிகளின் ஒருவர் பெயர் சரஸ்வதி என்றால் சரிதான். அடுத்த சகோதரியை முடிவைத்தானேந்தல் அருகில் வாகைக்குளத்தில் திருணம் செய்து கொடுத்திருந்தனர் என்றால் சரிதான். அவரது கணவர் பெயர் தாவீது என்றால் சரிதான். தாவீது இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு 2 மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் 2, 3 வாதிகள் என்றால் சரிதான்.

2.என் சம்மந்தி பெயர் தங்கம்மாள் என்றும் வழக்கிற்காக பரிபூரணம் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் சமுதாயத்தில் கணவருடன் பிறந்த சகோதரியை சம்மந்தி என்று சொல்லும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பாக 1 வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு நாங்கள் வழக்கறிஞர் தங்கராஜ் காந்தி மூலம் பதில் அனுப்பினோம் என்றால்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.01.27 18:49:33 +0530

தெரியவில்லை. பதில் அறிவிப்பு சம்மந்தமாக யாருக்கும் தெரியும் என்றால் என் மகன் பாஸ்கருக்கு தான் தெரியும்.

3.30 செண்ட் நிலமும் ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்டது என்று வா.சா.ஆ 4 பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரியல்ல. அதனால் தான் பதில் அறிவிப்பு அனுப்பியது குறித்து தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 15 செண்ட் நிலம் பரிபூரணத்திற்கு பாத்தியப்பட்டதாகவும், அவரிடம் இருந்து கிரையம் ஒப்பந்தம் மூலம்சொத்தினை பெற்றதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறும் பரிபூரணம் என் சின்ன மாமனார் ஹரிஹரபுத்திரனின் மகள் என்றால் சரிதான்.

4.சொத்து முழுவதும் ஈஸ்வரனின் பாக சொத்து என்றால் சரியல்ல. ஹரிஹரபுத்திரனுக்கு அதில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவருடன் பிறந்த சகோதரர் பரமசிவன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் எனறால் சரிதான். என் நிரூபணவாக்குமூலத்தில் பரமசிவனுக்கு திருமணம் ஆகாததால் வீடு 1ம் வாதிக்கும், வழக்கு சொத்து 15 செண்ட் நிலம் எனது கணவருக்கும் ஒதுக்கப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பரமசிவனின் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

5.பரமசிவனின் வீடு 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரனின் பாகத்திற்கு கிடைத்த வயல்களை வழக்கில் சேர்க்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் எல்லா சொத்துக்களும்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.27 18:49:39 +0530

ஈஸ்வரனின் சொத்துக்கள் தான். ஈஸ்வரனின் சொத்துக்களில் என் கணவருக்கு கிடைத்த பாகத்தை 04.11.1985ல் 1ம் வாதியின் மனைவி பாக்கியத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். குடும்ப சொத்துக்களில் வழக்கு சொத்தான 30 செண்ட் மட்டும் தான் பாகம் ஆகாமல் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

6.பி.சா.ஆ 5ல் கண்டுள்ள ஆவணங்களின் விபரங்கள் தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. பி.சா.ஆ 5 ல் இணைக்கப்பட்டுள்ள மோசடியான வட்டாட்சியர் சான்று மூலம்தான் பி.சா.ஆ 5 ஆவணத்தினை நானும், என் கணவரும் மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ 5 மூலம் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. வாதிகள் குடியிருந்து வரும் கதவு எண் 7/30 க்கு கிழக்கில் உள்ள வீட்டை நாங்கள் பரிபூரணத்திடம் இருந்து கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். பரிபூரணம் என் சின்ன மாமனார் மகள் என்றால் சரிதான். அந்த வீட்டின் தென்பக்கம் கதவு எண் 7/78A ல் எனது மகன் ரமேஷ் குடியிருந்து வருகிறார் என்றால் அந்த ரமேஷ் அத்தான் மகன் ஆவார்.

7.பரமசிவன் குடியிருந்த வீடு 7/78 என்றால் நம்பர் தெரியவில்லை. அந்த வீடு என் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. கதவு எண் 7/78 பரமசிவன் வீடும் என்றும், அதனை மோசடியாக பட்டா மாற்றி என் பெயரில் மாற்றிக்கொண்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 7/78 வீடு எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் கணவருக்கு குடும்ப பாகப்பிரிவினையில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.27 18:49:42 +0530

கிடைத்தது. 7/78 வீடு என் கணவருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8.நான் 2019 அக்டோபர் முதல் வழக்கு சொத்தில் வாதிகளின் கூட்டு அனுபவத்திற்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதிகள் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. பரமசிவனுக்கு பாத்தியப்பட்ட 30 செண்டில் 15 செண்ட் ஹரிஹரபுத்திரனுக்கும், 15 செண்ட் ஈஸ்வரனுக்கும் ஒதுக்கப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 30 செண்ட் நிலமும் ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஈஸ்வரனுக்கு பிறகு அவரது 3 ஆண் மக்கள் மற்றும் 2 பெண்மக்களுக்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டதாக இருந்தது என்றால் சரியல்ல.

9.ஈஸ்வரனின் பெண்மக்கள் வீட்டு மனையை வாங்கி கொண்டு நஞ்சையில் உள்ள பாகங்களை வாய்மொழியாக விட்டுக்கொடுத்துவிட்டதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு பரமசிவன், ஹரிஹரபுத்திரன், செல்லத்துரை ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக இருந்தது என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பரமசிவனுக்கு குழந்தைகள் இல்லாததால் வீடு ஹரிஹரபுத்திரனுக்கும், வழக்கு சொத்து என் கணவருக்கும் ஒதுக்கப்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10.30 செண்ட் நிலமும் என் கணவருக்கு பாத்தியப்பட்டு எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பரிபூரணம் வாரிசு இல்லாமல் போனதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.01.27 18:49:47 +0530

சொத்தினை தவிர ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்ட பிரிக்கப்படவேண்டிய சொத்து உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு பாதி பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ 6, 7 ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.01.27 18:49:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.